தமிழாய்வுத்துறை வழங்கும் ....

செங்காந்தள்

மாணவியர் இதழ் - 2



உலக தாய்மொழி தின சிறப்பிதழ்

பிப்ரவரி 21 - 2026

SCAN AnyScanner

தமிழாய்வுத்துறை

வழங்கும்....

செங்காந்தள்

மாணவியர் இதழ் - 2



உலக தாய்மொழி தினச் சிறப்பிதழ்

பிப்ரவரி 21, 2026

SCAN AnyScanner

தமிழாய்வுத்துறை வழங்கும்....

செங்காந்தள்

மாணவியர் இதழ் – 2

உலக தாய்மொழி தினச் சிறப்பிதழ்

பிப்ரவரி 21, 2026



பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

தேவியாக்குறிச்சி, தலைவாசல் வட்டம், சேலம் மாவட்டம்

அலைபேசி - 9442700889, 9442700999, 9047673999

உள்ளே .....

- கவிதைத் துளிகள்
- ஒரு நிமிடக் கதை சிறுகதை
- படித்ததில் பிடித்தது
- கட்டுரை
- மாணவிகளின் கைவண்ணம்
- தமிழாய்வுத்துறை நிகழ்வுகள்
- மாணவிகளின் சாதனைகள்

SCAN AnyScanner

சிறப்புரை



தாய்மொழி என்பது நம் அனைவருக்கும் அடையாளம் தருவது .பிற மொழிகள் எல்லாம் பேச்சாக இருக்கும்போது தமிழ் மட்டுமே நமக்கு உயிர் மூச்சாகவும் இருக்கின்றது. உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு நமது பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் முன்னெடுத்துள்ள செங்காந்தள் எனும் நூல் வெளியீட்டுப் பணியை எண்ணி உளமகிழ்கின்றேன். இச்செயல் மாணவியருக்கு மட்டும் அல்லாது பேராசிரியர்களுக்கும் ஊக்கத்தைத் தரும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. ஆண்டுகள் பலவாகினும் ஆற்றல் மாறாது... அழகு குறையாது.... நம் அகத்தில் நிறைந்து... அகிலத்தில் சிறந்திருக்கும் நமது தாய்மொழியாம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்களும் மாணவிகளும் எடுத்துள்ள பணியில் தொடர்ந்து செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு இவ்வரிய பெரிய முயற்சிக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தலைவர்


செ. இளையப்பன்

பாரதியார் மகளிர் கல்வி நிறுவனங்கள்

தேவியாக்குறிச்சி.

SCAN AnyScanner

அணிந்துரை



உலக தாய்மொழி தினம் இன்று. பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை சார்பாக செங்காந்தள் எனும் நூல் வெளியிடப்படுகிறது. இந்நூல் நம் தமிழ்த்துறை மாணவிகளின் படைப்புத் திறன்களை மெய்ப்பிக்கும் வகையில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், பொன்மொழிகள், நகைச்சுவைத் துணுக்குகள் மற்றும் படித்ததில் பிடித்தது என எண்ணில் அடங்கா படைப்புத்திறன்களை உள்ளடக்கியது. மேலும் இவ்வாறு அவர்கள் புரிந்த சாதனைகளும் பரிசுகளும் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இந்நூல் சிறப்புற அமைந்து தமிழ் இலக்கியம் பயிலும் மாணவியர்களுக்குப் புது வாழ்வும் வழங்கும். ஆர்வமும் ஆற்றலும் உடைய பேராசிரியர்கள் பல சாதனைகளைப் படைத்து மாணவச் செல்வங்கள் மென்மேலும் முயற்சியும் பயிற்சியும் பெற்று தமிழ்த் துறையில் வளர்ந்து வெற்றி வாகை சூட வாழ்த்துகிறேன்.

செயலர்

டாக்டர். ஏ.கே. ராமசாமி அவர்கள்,

பாரதியார் மகளிர் கல்வி நிறுவனங்கள்,

தேவியாக்குறிச்சி.

வாழ்த்துரை



மனிதனுக்கு மொழி இல்லை எனில் உணர்வில்லை ;வாழ்வில்லை. தாய்மொழியே ஓரினத்தின் நாகரீகத்தையும் பண்பாட்டையும் அரசியல் பொருளாதாரத்தையும் பிரதிபலிக்கின்றது. கனிச்சுளையும் கனிச்சாறும் மலர்த்தேனும் பசும்பாலும் இளநீரும் சுவையாகினும் தமிழ் என் உயிரானது என்று கூறிய பாவேந்தரின் போற்றுதலுக்குரியது தமிழ் மொழி .உலகத் தாய்மொழி தினத்தை முன்னிட்டு தாய்மொழியான மண்ணைத் தமிழுக்கு அணி செய்யும் நோக்கில் நமது பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் செங்காந்தள் எனும் நூல் வெளியிடப்படுகிறது. தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்களும் மாணவியரும் மேற்கொண்ட இம்முயற்சிக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இனி ஒவ்வொரு ஆண்டும் இப்பணி மேலும் தொடரவும் விழைகின்றேன்.

எஸ். ஆர். டி. செல்வமணி,

பொருளாளர்,

பாரதியார் மகளிர் கல்வி நிறுவனங்கள்,

தேவியாக்குறிச்சி.

SCAN AnyScanner

வாழ்த்துரை



வாழ்க்கைக்கு இலக்கணமாக பயிற்சியைப் பாடமாக்கி தன்னம்பிக்கை கொண்டு புதிய முயற்சியோடு முன்னேற்றப் பாதையில் வெற்றி வாகை சூடி மாணவிகளை நல்வழிப்படுத்த சிறந்த வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் அழைத்துச் செல்வதில் தமிழ்த்துறை எப்போதும் தன்னிகரற்ற துறையாக விளங்குகிறது. எப்பொழுதும் எந்தச் செயலைச் செய்தாலும் அதில் புதுமையாகச் செய்து ஆர்வத்தை ஏற்படுத்தும் திறம் படைத்த பேராசிரியர்கள். இதுபோன்று மென்மேலும் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்.

நன்றி,

முதல்வர்

முனைவர் தே. ராஜகுமாரி

பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி

(தன்னாட்சி).

நன்றியுரை



என் துறை சார் மாணவக் கண்மணிகள் கல்வி கேள்விகளோடு சிறந்து விளங்கி பல்வேறு திறன்சார் போட்டிகளிலும் வெற்றி வாகை சூடுவதோடு படிப்பு மட்டுமல்லாமல் பேச்சாற்றல், எழுத்தாற்றல், பொது அறிவு என பன்முகத் திறன்களோடு சிறப்பு செய்து தமிழ்த்துறைக்கும் பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரிக்கும் பெருமை சேர்த்து வருகின்றனர். பேராசிரியர்களும் மாணவிகளும் ஒருங்கிணைந்து செயலாற்ற எங்களை நல்வழிப்படுத்திச் செல்லும் புதுமைப் பெண்ணாம் ஆளுமைத் திறன் கொண்ட என் கல்லூரி முதல்வர் முனைவர் தே. ராஜகுமாரி அம்மா அவர்களுக்கும் கல்வி நிறுவனங்களின் தலைவர் செயலர் ஏ. கே. ராமசாமி, பொருளாளர் எஸ். ஆர். டி. செல்வமணி மற்றும் அனைத்து இயக்குனர் பெருமக்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். இனிவரும் காலங்களில் இது போன்ற சிறப்பான செயல்களைச் செய்து கல்வித் துறையில் சாதனைகள் புரிய வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு

முனைவர் சு. இந்திரா

தமிழாய்வுத் துறைத் தலைவர்

SCAN AnyScanner

வாழ்த்துரை



பாரதியார், தன் இருபத்திரண்டாவது அகவையிலேயே சக்கரவர்த்தினி என்னும் மகளிர் முன்னேற்ற மாத இதழுக்கு ஆசிரியர் ஆனார். அதில் தான் மட்டும் எழுதாமல், பற்பல இளம் பெண் எழுத்தாளர்கள் எழுதவும் வாய்ப்பு வழங்கினார். பாரதியைப் பெயரில் மட்டும் தாங்காமல் ஆற்றும் ஒவ்வொரு செயலிலும் தாங்கி நிற்கும் சிறப்பார்ந்த கல்லூரி, சேலம் தலைவாசலில் உள்ள பாரதியார் மகளிர் கலைக் கல்லூரி. செங்காந்தள் – 2 என்ற பெயரில் மாணவிகளின் படைப்புகள் அடங்கிய மலரை அவர்கள் வடிவமைத்திருப்பது இதற்கொரு சிறந்த சான்று. உலகத் தாய்மொழி நாளை ஒட்டி இந்த மலர் வெளியிடப்படுவது கூடுதல் சிறப்பு. மாணவிகளுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்.

பாரதியார் எள்ளுப்பேரன்

மற்றும்

திரைப்படப் பாடலாசிரியர்

திரு. நிரஞ்சன் பாரதி

SCAN AnyScanner

தமிழாய்வுத்துறை சிறப்புகள்

- பல்கலைக்கழக அளவில் 7 தங்கப் பதக்கங்கள்.
- பெரியார் பல்கலைக்கழக அளவில் 57 தரவரிசை பட்டியல்கள்.
- NET/SET/Ph.D. தகுதி வாய்ந்த அனுபவமிக்க பேராசிரியர்கள்.
- பன்னாட்டுக் கருத்தரங்கம் / தேசிய கருத்தரங்கம்/பயிற்சிப்பட்டறைகள்.
- கல்விச் சுற்றுலா/ திறன் மேம்பாட்டுப் பயிற்சி.
- வள்ளலாரின் 201- வது பிறந்தநாள் விழாவில் ஆளுநர் மாளிகையில் பங்கேற்பு.
- சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை பேரணி.
- பன்னாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- வருடம் தோறும் செங்காந்தள் மாணவர் ஆண்டு இதழ் வெளியீடு.

பாடப்பிரிவுகள்

- B.LIT (பி.லிட் தமிழ்)
- M.A. (எம்.ஏ தமிழ்)
- Ph.D (முனைவர் பட்டப்படிப்பு)

துறைசார் வேலைவாய்ப்புகள்

- ஆசிரியர் பணி
- பேராசிரியர் பணி
- அரசுப்பணி
- ஊடகத் துறை
- திரைப்படத் துறை
- அயல்நாடுகளில் வேலைவாய்ப்பு
- பேச்சாளர்
- எழுத்தாளர்
- பன்முகக் கலைஞர்
- தமிழ் மென்பொருள் உருவாக்கப்பணி

SCAN AnyScanner

- மொழிபெயர்ப்புப் பணி
- பதிப்புத்துறை
- மின்நூலாக்கப் பணி
- அயலக தமிழ்ப் பிரிவுகளில் பணி வாய்ப்புகள்
- இணையத்தில் தமிழ்ப் பணி வாய்ப்புகள்
- ரயில்வே துறையில் குரூப் டி பணி வாய்ப்புகள்

தமிழாய்வுத்துறை பேராசிரியர்கள்

- முனைவர் சு. இந்திரா M.A.,NET.,M.Phil.,Ph.D
- மா. ஷர்மிளா, M.A.,M.Phil., B.Ed., SET.,
- வி. ரேகா M.A.,M.Phil., B.Ed.,
- ரா. ஐஸ்வர்யா M.A.,B.Ed.,TET.,
- முனைவர். பீ. ரஹ்மத் பீபி M.A.,T.P.T.,P.P.T.,Ph.D.,
- க. புஷ்பா M.A.,B.Ed.,M.Phil.,
- அ. ரஞ்சிதா M.A.,M.Phil.,NET.,
- ந. ரேவதி M.A.,B.Ed.,M.Phil.,
- க. சுமதி M.A.,M.Phil.,NET.,
- முனைவர் ஸ்ரீ. அழகு லெட்சுமி M.A.,M.Phil.,NET.,SET.,Ph.D.,
- முனைவர் தி. மணிமேகலை M.A.,M.Phil.,B.Ed.,Ph.D.,
- பி. திவ்யா M.A.,M.Phil.,B.Ed.,NET.,
- நா. உமாராணி M.A.,M.Phil.,
- கோ. ஜானகி M.A.,B.Ed.,M.Phil.,
- மு. கலைச்செல்வி M.A.,
- தீ. ஐஸ்வர்யலஷ்மி M.A.,M.Ed.,M.Phil.,M.A.,
- ம. மணிப்ரியா M.A.,B.Ed.,
- முனைவர் ரா. சித்ரா M.A.,B.Ed.,M.Phil.,Ph.D.,

SCAN AnyScanner

உயிரின் உணர்வு

முத்தமிழே
என் மூத்த தமிழே!
உன்னைப்பற்றி எழுத
உன்னிடம் வார்த்தைகளை தேடுகிறேன்!
இதை யாரிடம் சொல்ல?
என்ன இல்லை உன்னிடம்?
உன்னைப்பற்றி நான் என்ன எழுத....
தொன்மைக்கு தொல்காப்பியம்
நல்ல ஒழுக்கத்திற்கு நற்றிணை!
வரலாற்றுக்கு புறநானூறு!
இறைவனின் புகழுக்கு திருமுருகாற்றுப்படை!
கார்காலத்திற்கும் முல்லைப்பாட்டு!
பொதுமறைக்கு திருக்குறள்!
தமிழனுக்கு நான்மணிக்கடிகை!
பத்தினிப் பெண்ணின்
பெருமைக்குச்சிலப்பதிகாரம்
பக்தி இலக்கியத்தின் சிறப்பிற்கு- பன்னிரு திருமுறைகள்
உன்னைப்பற்றி கூறக்கூற
காகிதங்கள் நீளுமே தவிர
உந்தன் பெருமை என்றும் குன்றி நிற்காது!
இத்தனை பெருமைகள் தன்னுள் வைத்துள்ள என் பழந்தமிழே!
ஒரு நாளும் உன்னைத்தொழ மறவேனோ!

பாவனா. செ
முதலாமாண்டு நுண்ணுயிரியல்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

என் அடையாளம்

தாய்மொழி
என் முதல் மூச்சு
என் கடைசி கனவு
என் நெஞ்சின் நரம்புகளில் ஓடும் அடையாளம்!
அம்மா கற்றுக் கொடுத்த முதல் சொல்லில்,
உலகம் அர்த்தம் கண்டது;
அப்பா சொன்ன ஒரு வார்த்தையில், தைரியம் என்
நெஞ்சில் விதைக்கப்பட்டது.
பள்ளியின் பலகையில் எழுதினாலும்,
மேடையின் மைக்கில் முழங்கினாலும்
என் நாக்கு தேடும் மொழி
என் மொழி... தாய்மொழி!
அயல் மொழி அறிவை தரலாம்,
அடையாளம் தருவது
என் தாய்மொழி மட்டுமே!
சங்கம் கண்ட மொழி
சமயம் கடந்த மொழி
அறம் சொல்லி அறிவை வளர்த்த மொழி
புலவர் பேசிய மொழி பெண்ணின் கண்ணீரிலும்,
வீரனின் உயர்விலும் உயிராய் கலந்து நிற்கும் மொழி!
காலம் மாறினாலும் கலைஞர்கள் மாறினாலும்
என் மொழியின் பெருமை ஒரு நாளும் மங்காது!
இந்த மண்ணில் நான் நிற்கும் வரை இந்த மூச்சு ஓடும் வரை,
என் நாக்கில் ஒலிப்பது
ஒரே பெயர்தான் தமிழ்

மு. தாமரைச்செல்வி
முதலாமாண்டு நுண்ணுயிரியல்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

15

புரட்சி விதை

திக்கெட்டும் பரவட்டும் முற்போக்கு சிந்தனை!
மூடப் பழக்கங்கள் விட்டு ஒழியட்டும்!
தீண்டாமை எனும் பேயை விரட்டுவோம்!
இலஞ்சம் வாங்காமல் தொழில் செய்வோம்!
எத்துறையிலும் பெண்கள் உயர்ந்து நிற்போம்!
தமிழை என்றும் உயிராய் நினைப்போம்!
அன்னை தந்தை போற்றிக் காப்போம்!
மரங்கள் வளர்த்து மழை பெறுவோம்!
எல்லோரையும் நம்மைப் போல் நேசிப்போம்!
தீமை கண்டால் பொங்கி எழுவோம்!
ஏளனங்களை எட்டித் தள்ளி முன்னேறுவோம்!
மானம் ஒன்றே பெரிதென வாழ்வோம்!
ஒன்றுபட்ட சமுதாயம் கண்டு வாழ்வோம்!
சாதிமத பேதமின்றி மகிழ்வாய் வாழ்ந்திடுவோம்!
கனவுகளை நிஜமாக்கி செம்மாந்து நிற்போம்!
பதுமையும் பெருமையும் பெற்று மகிழ்ந்திடுவோம்!

முனைவர் பீ. ரகமத் பீபி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி).

AnyScanner

ஒழுக்கமே உயர்வு

இரவுக்கு அழகு தருவது மதி
பகலுக்கு அழகு தருவது கதிரவன்;
மனிதன் வாழ்க்கைக்கு அழகு தருவது ஒழுக்கம்;

ரா. திவ்யா
பி.சி.ஏ, முதலாமாண்டு
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி

உயிரின் உணர்வு

தாய் மற்றும் நம் தாய்மொழி!
இந்த உலகில் கோடிக்கணக்கான
மக்கள் இருந்தாலும்,
என் தாய் மற்றும் தந்தைக்கு,
ஈடு ஆகவே முடியாது
ஏனெனில் இரண்டுமே, நம் வாழ்வில்
முக்கியமானவை, முதன்மையானவை"

R. கோபிகா
I. BCA
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

17

உலகத் தாய்மொழி

முன்பு
என் தாய்மொழி
என் நாட்களின் சுவாசமாய் இருந்தது
எண்ணம் வந்த வேகத்தில் வார்த்தைகள் பிறந்தன
அதே மொழி காலண்டரில் ஒரு தேதியாகி
கொண்டாட வேண்டிய நாள்
என்று குறிக்கப்பட்டது

முன்பு
வீட்டில் அது குரலாக இருந்தது
அம்மாவின் அழைப்பிலும், பாட்டியின் கதைகளில்
பிறகு
பள்ளியில் அது பாடமாகி, மதிப்பெண்களின் அளவுகோலாகியது
அதனால்
உலக தாய்மொழி தினம் ஒரு நாளின் விழா அல்ல
வாழ்நாளை வலம் வரும் உலா !

ஜெ. பாசிலாபாத்திமா
முதலாம் ஆண்டு புள்ளியல் துறை,
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி,
(தன்னாட்சி)

தமிழ் வாழ்த்து

பொதிகை மலைஉந்தன் வீடல்லவோ - குடி
போவதெல்லாம் கவிஞர் ஏடல்லவோ தேன் தமிழ்
நாட்டிற்குக் கண்ணல்லவோ - எழில் திகழும் நீ
நல்ல பெண்ணல்லவோ!

காவிரியும் வைகையும் உன் சொந்தமா -
நல் பூவிரி சோலை எல்லாம் உன் பந்தமா
என்னன்பு எந்நாளும் உன்மீதம்மா -
நீ இருக்கும் இடத்திலோர் இணை ஏதம்மா?

மூன்று தமிழோடு உனக்கெல்லையா ? - புகழ்
முழுவதும் போவதற்கு உலகெல்லையா ?
துயர்வந்தால் படைசூழ ஆளில்லையா? –
பகை தொடர்ந்தால் முடிப்பதற்கு வேலி ல்லையா ?

ர. ஆசாரபி
முதலாம் ஆண்டு தமிழ் இலக்கியவியல்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி)

19

தமிழ் மொழியின் சிறப்பு

பொதிகை மலையில் பிறந்து
அகத்தியன் திருவாய் மலர்ந்து
அகம்புறம் என பிரிந்து
இயல் இசை நாடகம் என!
முக்கனிகளாய் க்கனிந்து
தொல்காப்பியத்தால் நிறைந்து
வள்ளுவன் ஓலையில் சிறந்து
ஔவையின் வாய்மொழியில் தவழ்ந்து
கம்பன் கவிகளில் மணந்து
முச்சங்கத்தால் வளர்ந்து
உலக இலக்கியங்களில் உயர்ந்து
பாரதி வரிகளில் மிளிர்ந்து
பல மொழிகளில் பிறக்கத் தாயாக இருந்து
கலங்கரை விளக்கம் என நிமிர்ந்து
இன்னும் இன்னும் இளமை எனத்திகழ்ந்து
அத்தமிழை வாய் மணக்கவே பேசி மகிழ்ந்து
இதோ! உன் முன்னால் நிற்கின்றேன் தலை நிமிர்ந்து!

சே. சஹானா
இரண்டாமாண்டு தமிழிலக்கியவியல்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

என் வேர்கள்

என்னைத் தாங்கும் "என் வேர்கள்"
வானத்தைத் தொட ஆசைப்பட்டேன்.
ஆனால் மண்ணை மறக்கவில்லை.
ஏனென்றால் வேரை மறந்த மரம் உயர்ந்தாலும் நிலைக்காது.
புயல்கள் வந்தாலும் நிற்கச் சொல்ல என்னை பிடித்தது என் தாய்மொழி.
அதனால்தான் இன்று, நான் உயரமாய் நிற்கின்றேன்
வானத்துக்கு அருகில், ஆனால் என் வேரோடு.

ப. அனிதா II -பி.லிட்.
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

தாய்மொழியாம் தமிழ் மொழி!

அண்டத்திலேயே பிறந்த இயற்கை மொழி!
ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த மொழி!
இளமை குறையாமல் வாழும் கன்னிமொழி!
ஈட்டி முனையைப் போல், கருத்தை ஊட்டும் முறை!
உள்ளத்து உணர்வை உணர வைக்கும் உயிர் மொழி!
ஊரெல்லாம் புகழ் பாடும் இனிய மொழி!
எத்திசைக்கு ஒலிக்கும் இதய மொழி!
ஏற்றமுடன் பயின்று வரும் பயிற்று மொழி!
ஐயத்தை எளிதில் நீக்கும் எழுச்சி மொழி!
ஒவ்வொரு மொழிக்கும் மூல மொழி!
அதுவே நம் தமிழ் மொழி!

கு. தனஸ்ரீ
இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியவியல்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

தமிழ் இயற்கையின் படைப்பு

தமிழுக்குச் சிறந்த சுவையே !

பல கிளைகளின் தோன்றிய தமிழே !

சிங்கத்தின் வீரப் பெருமையும் நீயே !

காற்றாய்த் திரிந்து எட்டுத் திசையிலும் பறந்த என் மூத்த தமிழே...

சிற்பத்தின் மூலம் பல வரலாற்றை தந்தவளும் நீயே!

நிலவைப் போல் என்றென்றும் ஒளியை தருபவளே!

பலர் வாழ்க்கையின் வெளிச்சம் தந்தவளே...

வாடாத மலரை போல என்றென்றும்

வாடாத தமிழே... என் கனவிலும் மனதினிலும்

உயிர் மூச்சிலும் குடியிருப்பவளும் என் தமிழே...

செ. நவீனா

II - பி. லிட். தமிழ்

பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி

(தன்னாட்சி)

22

என் பெருமை

நான் பேசாத போதும்
எனை வாழவைக்கும் மொழி!
வார்த்தைகளில் அல்ல...
வாழ்க்கையின் இடைவெளிகளில் நீ ஒளிந்து இருக்கிறாய்!

கண்ணீருக்கு
விளக்கம் சொல்லாத
ஒரே மொழி நீதான்!
எழுத்து தெரியாத காலத்திலேயே
நீ படிக்க ஆரம்பித்தாய்!
உலகம் எனை மாற்ற முயன்றாலும் எனை
'நான்' ஆக வைத்தது 'நீ' !

நான் சத்தம் இல்லாமல் அழைத்தால் கூட
ஓடி வரும் ஒரே உறவு
என் தாய்மொழி !

எத்தனை மொழிகள் கற்றாலும்
என் மனம் திரும்பும் இடம் என் தாய்மொழியே நீதான்!
என் அடையாளம் நீதான்!
என் பெருமை – என்
தாய் மொழியே
நீ வாழ்க!

ஆ. முத்தம்மாள்
II B.LIT.
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

23

தமிழ் மொழி

உயிரோடு கலந்த மொழி
உணர்வுகளைச் சொல்லும் இனிய மொழி
காலம் கடந்தும் அழியாச் செல்வம்
தமிழ் நம் தாய்: நம் பெருமை!

அம்மாவின் தாலாட்டில் பிறந்த மொழி
ஆண்டாண்டு வரலாற்றைத் தாங்கும் மொழி
அகத்தியன் எழுத்தில் ஆழம் கொண்டது
அறத்தின் வழியில் உலகம் கண்டது
குறளில் நீதியும்
காப்பியத்தில் காதலும்
சங்கப் பாலில் வீரமும் வாழ்வும்
ஒரு சொல்லில் உணர்ச்சி ஊறும் இனிமை
உலக மொழிகளில் ஒப்பற்ற பெருமை
மண்ணோடு கலந்து மனதில் வாழும்
மொழி அல்ல இது நம் உயிராகும்
தலைமுறை கடந்தும் தழைக்கும் செல்வம்
தமிழ் நம் அடையாளம்
தமிழ் நம் தெய்வம்

ஸ்ரீ. அனுயுக ஸ்ரீ
II B.LIT.
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

என் தமிழே

ஆதியிலே முதல் தோன்றிய அழகே !
அன்னை எனப் போற்றப்படும் உயிரே
உன் மொழியோடு விளையாடும் காற்றாக நான் மாறி
உன் மகத்தான படியேறவா?
இல்லை உன் மூச்சோடு நான் சேரவா ?
அண்டமெனப் போற்றப்படும் அழகே
உனை நான் மறவேனா உயிரே ?
என் அகம் நீயே! புறம் நீயே!
உணர்வோடு உறைந்தாயே!
என் உயிரின் ஒரு பாதையும் நீயே !
அடிவானம் சிவந்தாலும்
கொடிப்பூக்கள் மலர்ந்தாலும்
உனைப் போல இருக்காது அழகே ! அழகே !
என்னை யாவையும் வியக்க வைத்த அழகே !
எமை யாவையும் விளிக்க வைத்த அழகே!
என் அன்னை போல் அரவணைத்து....
முன்னைக்கும் முன்னை தோன்றிய என் உயிரே!
என் உலகத் தாயாகிய என் தமிழே!

சு. பிரியதர்ஷினி
I B.A. (HISTORY)
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

25

எங்கள் மொழி

அகிலம் போற்றும் ஆளுமை கொண்ட
மொழியாம் எங்கள் மொழி
ஆண்டுகள் பல கடந்தாலும்
என்றும் அழியாது எங்கள் மொழி
முச்சங்கம் வைத்த மொழியாம் எங்கள் மொழி
முக்காலம் கூறும் மூத்த மொழியாம் எங்கள் மொழி

தேசங்கள் பல போற்றும் மொழி
எங்கள் மொழி தேனிலும் இனிய மொழி எங்கள் மொழி

வள்ளுவன் வகுத்தது எங்கள் மொழி
மானிட வாழ்வை வகுப்பதும் எங்கள் மொழி

தேவாரம் பாடும் எங்கள் மொழி
தெய்வ வரலாற்றைக் கூறும் எங்கள் மொழி

உன்னத வழியில் நடத்தும் எங்கள் மொழி
உலக மொழிக்கெல்லாம் தாய்மொழி எங்கள் மொழி

எங்கும் ஒலிக்கும் எங்கள் மொழி
எல்லையற்ற மொழி எங்கள் மொழி
என்றும் தாழாது என் தமிழ் மொழி
அதுவே என் தாய்மொழி வாழ்க தமிழ் !

சு. செண்பகம்
III B.SC. (MATHS)
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

எம் தமிழ் மொழி

இனிமை கலந்த இனியமொழி - இன்
சுவையோடு நாவில் தவழும் மொழி.

இதிகாசங்களை தெளிவாக உரைத்த மொழி
இளமைமாற நெஞ்சில் கலந்த மொழி எம் தமிழ் மொழி

கம்பன் கண்ட காவிய மொழி
இளங்கோ கண்ட சிலம்பு மொழி
பொதிகை மலையில் தோன்றிய பொதிகை மொழி
வள்ளுவர் கண்ட பொய்யாமொழி
எம் தமிழ் மொழி.

சே. கோகிலா.
இரண்டாம் ஆண்டு
தமிழ் இலக்கியவியல்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

SCAN AnyScanner

தாய்மொழி தமிழ்

அகிலமெல்லாம் அரசாளும்
ஆதி மொழிகளுக்கெல்லாம்
அன்னையாய்த்திகழ்வது
எம் மொழி செம்மொழி
செந்தமிழ் மொழி!
காற்றின் கீதத்தையும்
கவிதையின் வசனத்தையும்
தன்னகத்தே கொண்டு தரணியில் சொல்லும்
ஒரு வீர மொழி!
தமிழ் எனும் தாய்மொழி!

கோ. ஜானகி
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

AnyScanner

நம் மொழி

அக்காலத்திலும்
இக்காலத்திலும் நம் மொழி
தமிழ் மொழியே
நான் அறிந்த மொழியோ
தமிழ் மொழியே
நான் கற்ற மொழியே
தமிழ் மொழி
சிறந்த மொழியே நம்
தாய்மொழி
சிறப்பு வாய்ந்ததே நம்
தாய்மொழி
பட்டங்களைச்சூடுவதோ நம்
தமிழ் மொழி
பட்டங்களைப் பெற்றதோ நம்
தாய்மொழி
அதிசயங்களைக் கொண்டதே நம்
தமிழ் மொழி
அதிசயங்களை வென்றதே நம்
தாய்மொழி!

ப. ஜோதிகா
வணிகவியல் துறை மூன்றாம் ஆண்டு
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

AnyScanner

தாய்மொழி

தாய் குரலில் சொன்ன
முதல் மொழி நமது தாய்மொழி!

தந்தை கொடுத்த
அறிவு மொழி நமது தாய்மொழி!

பாசத்தின் முதல் மொழி
நமது தாய்மொழி!

நெஞ்சில் நிறைந்த அன்பு மொழி
நமது தாய்மொழி!

பிற மொழிகள் பல கற்றாலும்
நமக்குச் சிறப்பு தருவது நமது தாய்மொழி!

த. மணிமேகலை
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

செம்மொழியாம் தமிழ் மொழி

செம்மொழியாம் தமிழ் மொழி
அதுவே என் தாய்மொழி
அகரத்தில் தொடங்கும் சிகர மொழி
அகத்தியன் கண்ட அமுதமொழி
வள்ளுவன் வளர்த்த குறள் மொழி
மூன்றெழுத்தில் உலகம் வாழும் தமிழ் மொழி
உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி
உயிர்மெய் கலந்த அன்பு மொழி
குமரிக்கண்டத்தில் பிறந்த மொழி
அண்டமெல்லாம் வளர்த்த மொழி
உலகத்தின் கடைக்கோடி மக்களையும்
வியக்க வைக்கும் மொழி
தொன்மைக்கு அகத்தியம்
இலக்கணத்திற்கு தொல்காப்பியம்
புகழ்ச்சிக்குப் புறநானூறு
ஐவகை நிலங்களை விளக்கும் குறுந்தொகை
என்ன இல்லை என் தாய் மொழியில்
எல்லையற்ற மொழி இது
எல்லாவற்றையும் எடுத்தியம்பும் மொழி இது
ஈரடிக்குறள் போதுமே
தமிழில் திருவடி தெரியும் அதிலே!
முக்காலத்தின் ஆழம் புரியும்
தமிழ் மொழியிலே
தமிழ்ச்சொல் ஒன்றே போதுமே
தரணியில் என்றும் நம்மை உயர்த்துமே!!!

வெ. கிருத்திகா
I B.sc. Biotechnology
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

SCAN AnyScanner

எங்கள் மொழி நல்ல மொழி

அன்னை சொல்லித் தந்த மொழி
தாலாட்டில் கேட்ட மொழி
பாட்டி கதை சொன்ன மொழி

இனிமை கூட்டும் இன்ப மொழி
அன்பைப் போதிக்கும் அருமை மொழி
துன்பம் போக்கும் துடிப்பு மொழி
நன்மை விளைக்கும் நற் செம்மொழி

உயிருடன் கலந்த மொழி
என்றும் இளமை மாறா மொழி
அழியா வரம் பெற்ற மொழி
அதுவே எங்கள் தாய்மொழி
உயிரினும் மேலான செந்தமிழ் மொழி!

P. Naviyadharshini
I B.sc.Biotechnology
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

விழித்தெழு தோழா

தமிழர்களின்
தாய்மொழி தான்
தமிழ் என்று
பலரும் நினைத்துள்ளார்
பல மொழிகளுக்கும்
தாய்மொழி
தமிழ் தான் என்று
வரும் காலம் உணர்த்தும்.....

யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிப்போல்
இனிமையை கண்டதில்லை
என்று பாடினான்
மகாகவி பாரதியார்....
ஏனெனில்
அவன்
காற்றை சுவாசித்து
வாழவில்லை
தமிழ்க்கவிதையை சுவாசித்து
வாழ்ந்தவன்....

தமிழுக்கும்
அமுதென்று பேர்
அந்தத்தமிழ் இன்பத்தமிழ்
எங்கள்
உயிருக்கு நேர் என்று
பாடினான்
பாவேந்தர் பாரதிதாசன்

ஏனெனில் அவன்
உணவால் வாழவில்லை
தமிழ் உணர்வால் வாழ்ந்தவன்....

அந்தப்பரம்பரையில் வந்த
நாம் தான் தமிழ்ப்பள்ளியில்
படிப்பதும் தமிழ் பேசுவதும்
கேவலம் என்று நினைத்து
அந்நிய மொழிக்கு
விசிறிக்கொண்டிருக்கிறோம்....

தமிழ் பேசிய பிறகு
தேனைச் சாப்பிட்டாலும்
கசக்கும் அட...
தமிழை வாசித்த பிறகு
வீணையை வாசித்தாலும்
வெறுக்குமடா...
காலத்திற்கு
அடுத்தபடியாக
இந்த உலகத்தில்
மரணம் இல்லாதது
எதுவென்று கேட்டால்
தயங்காமல்
தமிழ் என்று சொல்லடா!

சிங்கப்பூர், மலேசியா
ஆஸ்திரேலியா போன்ற
அந்நிய நாடுகள்
தமிழைக்கொடிக்கட்டி
பறக்க விட்டுப் பார்த்து

பரவசமடைகிறது ஆனால்
நாம் தான் தமிழ்க்கொடியை
அரைக்கம்பத்தில் கட்டி
அஞ்சலி செலுத்தவே
ஆசைப்படுகிறோம்

அக்காலத்தில்
தோன்றிய தமிழ் மொழி
கணினி காலத்திலும்
இணையத்தைக்
கலக்கிக் கொண்டிருக்கிறது...
அதன் வலிமையைத்தமிழனே!
உன்னால் உணர முடியவில்லை?

தமிழ் வழியில் கற்று தரணியில்
புகழ்பெற்றவர்களின் பெயர்களை
வரிசையாக எழுதினால்...
வரலாற்றில் பக்கங்கள் பற்றாது....

நாம் தான்
தமிழ் வழியில் படித்தால்
வேலை கிடைக்காது என்று
ஆங்கிலப் பள்ளியில்
பொருட்களை அடமானம் வைத்து
பிள்ளைகளை படிக்க வைத்து கொண்டிருக்கிறோம்.....!

அன்னியர் நம்மிடம்
தமிழில் பேச வேண்டுமென்று
நினைக்கும் நாம்
நம் பிள்ளைகள்
ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று
நினைப்பது எந்த வகையில் நியாயம்

அன்னியர் திக்கித்திக்கி
பேசும் தமிழை
ரசித்துப் பாராட்டுகின்றோம்
நம் பிள்ளைகள்
அழகாகப்பேசும் தமிழை
அலட்சியம் செய்கிறோம்
இது நமக்கே இழிவு இல்லையா ?

ஒரு பானை சோற்றுக்கு
ஒரு சோறு பதம்
என்பது போல.....

இனியாவது
விழித்தெழு தோழா !
சிங்கம் போல் சிலிர்த்தெழு தமிழா!

ந. பிரியா
I B.sc. Biotechnology
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

பெண் என்பவள்

பெண் என்பவள் தந்தையின் கனவைச் சுமப்பாள்...
பிள்ளைகளின் கனவுக்காக வாழ்வாள்...
கணவனின் கனவில் இருப்பாள்...
ஏ சமூகமே! அவளுக்கும் கனவுகள் உண்டடா..
குடும்பத்திற்காக வாழும் பெண்கள்...
உங்கள் குடும்பத்திற்கே குலதெய்வங்கள்...
சமூகத்திற்காக வாழும் பெண்கள் எம்
பாரதி கண்ட புதுமைப் பெண்கள்...
சரித்திரங்கள் மூடி வைத்த பெண்ணினத்தை
சரித்திர மாய் மாற்றிய பாட்டுடைத்தலைவனே...
சிறைப்பறவையாய் இருந்த பெண்ணிற்கு
சிறகடிக்கக் கற்றுக்கொடுத்தது நீ...
கூண்டுப்பறவையாய் இருந்த குயில்களை
குரல் வளத்தோடு கூவ வைத்தவன் நீ...
சமைக்கின்ற கரங்களுக்கு சகலமும் முடியும்
என சாதிக்க வைத்தவன் நீ...
உன்னையன்றி பிரிதொருவரும் பெண்ணினத்தை
இத்துணை பெருமைப்படுத்தவில்லை...
இவ்வுலகில் மகத்தான மாந்தரை உலகிற்கு உணர்த்திய
பெண்மையோடு பயணிப்போம்...

க. புஷ்பா
தமிழாய்வுத்துறை உதவிப்பேராசிரியர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

தாய்மொழியின்– தாய்மை
தாலாட்டில் தொடங்கிய சொற்கள்,
தாயின் அரவணைப்போடு கற்ற மொழி –
அது தாய்மொழி!

உடலில் உயிரை சுமந்தவள் தாய்,
உள்ளத்தில் உணர்வை சுமந்தது மொழி;
இரண்டும் சுமை அல்ல,
சுகமான இன்பம் !

அழுகையில் அரவணைத்தவள் தாய்,
அர்த்தமில்லா வாழ்விற்கு
அறிவு அமுது தந்தது மொழி !

விழுந்தபோது தூக்கிய தாயின் கரங்கள் போல்
அறியாமை
வாழ்க்கையில் நின்றபோது
வழி காட்டிய சொற்கள் தாய் மொழி !

தாய் பால் ஊட்டினாள் –
மொழி பண்பை ஊட்டியது;
தாய் உடலை வளர்த்தாள் –
மொழி ஆன்மாவை வளர்த்தது.
ஒரு நாள் போற்றப்படுவது
தாய்மொழி தினம்;

SCAN AnyScanner

ஆனால்
ஒரு உயிர் வாழும் நாள் முழுவதும்
வாழ்ந்து போற்றப்படுவது
தாய்மை!

தாய் இல்லையெனில் நான் இல்லை,
மொழி இல்லையெனில்
என்னை நான் அறியவில்லை!

முனைவர். ந. ரேவதி
தமிழாய்வுத்துறை உதவிப் பேராசிரியர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

SCAN AnyScanner

அன்னை மொழி

"தாய் மொழியே"
உன்னுள்
உறைந்து போன என்னை
உயிர்மெய்யாய்
உருவெடுத்தாயே!
அன்னை வடிவில்
ஆகாரம் தந்தாயே!
இன்பமாய் இருந்திட
இல்லறம் தந்தாயே!
ஈகை உனதென்று
ஊற்று கண்ட இடமெல்லாம் ஏறிசென்றாயே!
என் அன்னையே!
ஓடோடி வந்தேன்
உன் அரவணைப்புகாக
என்
தாய்மொழியே !!!!

அ. ரஞ்சிதா
தமிழாய்வுத்துறை உதவிப்பேராசிரியர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

SCAN AnyScanner

தாய்மொழி

புத்தக வரிகளில் மட்டும் இல்லை,
புலம்பலில், புன்னகையிலும் வாழும்,
வாழ்க்கையின் ஒவ்வொரு மூச்சிலும்
வேரூன்றிய உயிர்மொழி.

மறந்தாலும் மனம் மறக்காது,
மறைத்தாலும் இதயம் மறுக்காது,
நான் நானாக இருக்கச் செய்யும்
நிரந்தர அடையாளம் – தாய்மொழி.

நா. உமாராணி
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

தாய்மொழி தமிழே!

காலங்கள் மாறினாலும் என் எண்ணங்களை
உயிரோடு பேச வைக்கும் இந்த இனிய தமிழ் மொழி.
நான் தமிழில் பேசுகிறேன் தமிழில் கனவு காண்கிறேன்
என் அடையாளமாய்த் தமிழையே நான் நேசிக்கிறேன்
நான் தமிழில் கனவு காண்கிறேன் அந்த கனவுகளுக்குச்
சிறகுகள் கொடுப்பதும் தமிழே
என் அடையாளம் யார் என்று யாரும் கேட்க வேண்டியதில்லை
நான் உச்சரிக்கும் ஒவ்வொரு சொல்லும்
தமிழ் என்று பதில் சொல்கிறது
நான் வளர்ந்தது வார்த்தைகளால் அல்ல
உணர்வுகளால் அந்த உணர்வுகளுக்கு பெயர் வைத்த மொழி தமிழ்.
அதனால்தான் என் பயணத்தில் என்னுடன் வருவது
ஒரு மொழி அல்ல ஒரு அடையாளம்...
உலகம் மாறிக் கொண்டே இருந்தாலும் என்னுள்
மாறாத ஒன்று தமிழ் மொழியை நான் நேசிப்பது தான்.

கோ. இலக்கியா
மூன்றாம் ஆண்டு தமிழ் இலக்கியவியல்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

SCAN AnyScanner

தமிழ் மொழியின் சிறப்பு

தடுக்கி விழுந்தால் மட்டும் அ....ஆ....

சிரிக்கும்போது மட்டும் இ..... ஈ....

கூடு பட்டால் மட்டும் உ...ஊ....

ஐயத்தின் போது மட்டும் ஐ....

ஆச்சரியத்தின் போது மட்டும் ஒ...ஓ...

வக்கணையின் போது மட்டும் ஔ.....

விக்கலின் போது மட்டும் ஃ.....

என்று தமிழ் பேசி மற்ற நேரம்

வேற்று மொழி பேசும் தமிழர்களிடம் மறக்காமல்

சொல் உன் மொழி

தமிழ் மொழியென்று !!

ப. கோகிலா பிரவீனா

II - BCA 'A'

பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி

(தன்னாட்சி)

கல்வி

அள்ள அள்ளக்குறையாத
அட்சய பாத்திரம் தான் கல்வி!
அறிவு எனும் பெட்டகத்தைத்
திறக்க உதவும் ஒரே சாவி தான் கல்வி!
அறியாமையை அகற்றி
அறிவைக் காட்டும்
அற்புத விளக்கு தான் கல்வி!
நாட்டின் மிகப்பெரிய
அரணே கல்வி!
ஏடுகள் பல புரட்டியதால்
வாழ்க்கையில் ஏற்றம் தந்திடுமே கல்வி!
கல்வி கற்பது தவம்!
அதை கற்பிப்பது வரம்!
யார் கைவிட்டாலும்
கற்ற கல்வி கைவிடாது உன்னை!

ந. சத்யா
இரண்டாம் ஆண்டு நுண்ணுயிரியல் துறை
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

ஒரு நிமிடக்கதை

அவளின் அவள்

கல்லூரிப் படிப்புக்கு வந்தேன். நுழைவாயிலிலேயே நின்றேன். கனவு என்னை வா என்றதோ தெரியவில்லை. அவளின் அன்பு என்னை அழைத்தது. உள்ளே வந்தேன் என் கண்கள் அவளை தேடியது. பார்த்தேன் என் அன்புக்கு சொந்தக்காரியை. நாட்களும் ஓடியது நீரை போல். அவளின் அன்பால் தடுமாறி நின்றேன். ஒவ்வொரு நொடியும் என் மீது உள்ள அன்பு பொங்கல் போல் வழிந்தது. மீண்டும் ஒருமுறை ஓடியது நாட்கள். ஓடிய நாட்கள் எங்களை பிரித்தது. அருகில் நின்று பேசி பார்த்த உன்னை. தொலைவில் நின்று பார்க்க நேர்ந்தது. மனமுடைந்து நின்றேன். அவளை பிரிய மனமில்லாமல் அழுதேன். பேசினேன். என்னை புரிந்து கொள்வாள் என்று. ஆனால் ஏதோ என்னால் அவளின் மனதை மாற்ற இயலவில்லை. விதியின் செயலால் நாட்களும் ஓடியது. வருடமும் ஓடியது. உனக்கு என்னை பிடிக்கவில்லை என்றாலும். எனக்கு பிடித்த உன்னை கஷ்டப்படுத்த விருப்பமில்லாமல் விலகி நிற்கிறேன் உன் முகத்தில் காணும் அந்த சிரிப்பிற்காக. என் நட்புக்கும் என் அன்புக்கும் சொந்தக்காரி நீ. என்னை தேடி ஒருநாள் வருவாய் என்ற நம்பிக்கையுடன் இன்றும் என்றும். நீ என்னுடன் இருந்த அந்த அழகிய நாட்களை நினைத்து வாழ்கிறேன். எனக்கு கிடைத்த வைரமும் நீயே. இனி நான் தேடினாலும் கிடைக்காத வைரமும் நீயே.

இப்படிக்கு

உன் அன்புத்தோழி

இரா. சக்தி

முதலாம் ஆண்டு பிசிஏ. 'அ' பிரிவு

பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி,

தென்னாட்சி

அம்மாவின் பாஷை

லண்டனில் வசிக்கும் ராகேஷ், தனது ஐந்தாண்டு மகன் கவினுடன் தமிழ் பேச தயங்கினான். "இங்கி-ஷ் தான் முக்கியம்" என்பது அவன் எண்ணம். ராகேஷின் அம்மா, கிராமத்திலிருந்து லண்டன் வந்திருந்தார். ஒருநாள், கவின் தன் அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு, "பாட்டி, எனக்கு அந்த கதையைத் தமிழில் சொல்லுங்களேன்," என்றான். ராகேஷ் ஆச்சரியமடைந்தான். அம்மா, 'நிலா, நிலா ஓடி வா' பாட்டைப் பாடி, தன் பாஷையின் இனிமையோடு கதையை விவரித்தார். அந்த மழலை மொழிக்கு முன்னால், இங்கி-ஷ் வெறும் வார்த்தைகளாகத் தெரிந்தன.

"ராகேஷ், இது வெறும் பாஷை இல்லடா, நம்ம அடையாளம், நம்ம பண்பாடு. இதை விட்றாத," என்றாள் அம்மா. பிப்ரவரி 21 உலக தாய்மொழி தின அன்று, ராகேஷ் தன் மகனுடன் தமிழில் பேச ஆரம்பித்தான். "அம்மா, அம்மா," என்று கவின் தமிழில் அழைத்தபோது, ராகேஷின் இதயம் பெருமையால் நிறைந்தது.

கருத்து: தாய்மொழி நம் அடையாளம், அது அன்பையும் பண்பாட்டையும் கடத்துகிறது.

குறிப்பு: இந்தக் கதை, தாய்மொழியை நேசிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

ய. சசிகலா

I B.SC BIO TEACHNOLOGY

சிறுகதை

"மொழியால் வாழ்வு உயரும்"

சேலம் மாவட்டத்தில் துருவன் அவனது குடும்பத்தோடு வசித்து வந்தான். துருவன் சிறுவயதில் இருக்கும் பொழுதே தாய், தந்தை இருவரும் விபத்தில் இறந்து விட்டனர். அவனுக்கு சரண் என்ற சகோதரனும், ஆதிரா என்ற சகோதரியும் இருந்தனர். இவர்கள் மூவரும் இவர்களின் பாட்டியால் வளர்க்கப்பட்டனர். துருவன் கல்லூரி படிப்பை முடித்துவிட்டு வேலை தேடிக்கொண்டிருந்தான். சரண் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். ஆதிரா பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள். துருவன் கல்லூரியில் படித்த நாட்களை விட அவன் பிற மொழிகளை கற்றுக்கொள்ளவும் பேசவும் ஆர்வத்தோடு இருந்தான் மேலும், பாட்டி இவனின் இந்த நிலையைக் கண்டு திட்டிக்கொண்டிருப்பார். துருவன் தன் நண்பர்களுடன் பிற மொழிகளை பேச ஆரம்பித்தவன் கைபேசியில் செயலிகளை பதிவிறக்கம் செய்தும் பல மொழிகளையும் கற்றான். துருவனும், சரணும் ஓர் மாலைப் பொழுதில் நாம் இருவரும் அருகில் உள்ள அரசு கல்லூரியில் ஒரு சாதாரண பட்டப்படிப்பை எடுத்தோம், நீ படித்து முடித்துவிட்டாய் நான் படித்துக் கொண்டிருக்கிறேன், என்றும் ஆனால் ஆதிராவை மட்டும் அவள் விருப்பத்திற்கு படிக்க வைக்க வேண்டும் என்று சரண் கூறிக்கொண்டிருந்தான். துருவனும் ஆமாம் என்பது போல தலையை ஆட்டினான். அவன் ஏதோ யோசனையிலும் வருத்தத்திலும் இருப்பதை கண்ட சரண் அவனிடம் என்னவென்று கேட்க அதற்கு அவன் வேறொன்றுமில்லை வேலை எதுவும் கிடைக்கவில்லையே என்றுதான். சரண் திடீரென்று அவனுக்கு கிடைத்த யோசனை மற்றும் செய்தியை துருவனிடம் கூறினான். அண்ணா உனக்குத்தான் மொழிகள் பல தெரியுமே சென்னையில் மொழிகள் பல தெரிந்தவர்களுக்கு வேலை உள்ளதாம் நீ வேண்டுமானால் அதை முயற்சி செய்து பார் என்று கூறினான். துருவனுக்கு மகிழ்ச்சி பெருகியது, அவன் உடனே இதைப் பற்றி விசாரித்து சென்னைக்கு செல்ல தயாரானான் தன் பாட்டியிடம் கூறியவுடன் அவருக்கு மகிழ்ச்சி பொங்கியது. பாட்டி செலவுக்கு வைத்துக்கொள் என்று கூறி அவனுக்கு பணம் கொடுத்தார். அவனோ அதை மறுத்துவிட்டான் கூலி வேலைகளுக்கு சென்றபொழுது பெற்ற பணத்தை சேர்த்து வைத்துள்ளதாக கூறினான். சரண், ஆதிரா, பாட்டி மூவருக்கும் சென்று வருகிறேன் என்று கூறி விடைபெற்றுக்கொண்டான் துருவன். துருவன் சென்னைக்கு வந்து சேர்ந்தவுடன் தன் வேலையை ஆரம்பித்தான், தேடல் வேலையைத்தான்.

துருவன் வேலை கிடைக்காதோ என்று மனம் தளரவில்லை வேலை கிடைக்க பல முயற்சிகளை மேற்கொண்டான். தோல்விகள் பல கொடுத்தாலும் கடைசியில் வெற்றியையும் அந்த கடவுள் துருவனுக்கு கொடுத்து விட்டார். ஆம் அவனுக்கு வேலை கிடைத்தது. இந்த நற்செய்தியை அவன் தன் குடும்பத்துடன் பகிர்ந்தான். அதுமட்டுமல்லாது இங்கு ஏற்கனவே Group 4 தேர்வு எழுதிய சரணுக்கு கிராம நிர்வாக அலுவலர் (VAO) பதவி கிடைத்தது. இவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை இதுவரை எத்தனை கஷ்டங்கள் வந்துள்ளது இருந்தபோதிலும் இந்த ஒரு மகிழ்ச்சி அனைவரையும் மகிழ வைத்தது. சில நாட்களுக்கு பிறகு ஆதிராவின் +2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியாகின. அவள் 600-க்கு 463 மதிப்பெண்கள் பெற்றிருந்தாள். அவள் பொறியியல் கல்லூரியில் சேர்க்கப்பட்டாள் இது அவளது விருப்பம் அவர்களது முடிவு. சில வருடங்கள் கழித்து துருவன் வேலை பார்க்கும் இடத்தில் விழா ஒன்று நடைபெற்றது. அதில் அவன் "சிறந்த பன்மொழி பேச்சாளர்" என்று அறிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டான். அவனது குடும்பம் ஆதிராவின் +2 பொதுத்தேர்வு முடிவுகளுக்கு பிறகு சென்னையில் குடியேறியது. சரணுக்கு சென்னையில் வேலை இடமாற்றம் செய்யப்பட்டது. ஆதிரா படிக்கும் பொழுதே அதிக சம்பளத்தில் வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டாள். இங்கு விழாவில் துருவன் தன்னுடைய இந்த விருதும் தன் வெற்றியும் இம்மொழிகளுக்குச் சொந்தம். அனைவருக்கும் தாய்மொழியே உயிர்மொழியாகும் உயர்மொழியாகும். மொழிகளால் என் வாழ்வும் உயர்ந்தது. உலக தாய்மொழிகள் தினத்தன்று இந்த விருதை பெறுவதில் மிக்க மகிழ்ச்சி. தாய்மொழி தலைசிறந்த மொழி அனைவரும் தாய்மொழிகளுக்கு மரியாதையும் மதிப்பும் தரவேண்டும் என்று கூறினான். மேலும் இவர்களது வாழ்வு உயர்ந்தது. துருவனின் கதை "மொழியால் வாழ்வு உயரும்" என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.

பா. அபி
I - B.COM(CA) - 'A'
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

படித்ததில் பிடித்தது

ஆதியில் உதித்த மொழி அறிவைத்தந்த மொழி
அழியா வரம் பெற்ற மொழி
அன்பைப்பகிரும் மொழி எம் தமிழ் மொழி
இனிமை கலந்த இனிய மொழி, இன்சுவையோடு
நாவில் தவழும் மொழி இதிகாசங்களை
தெளிவாக உரைத்த மொழி
இளமைமாறா நெஞ்சில் கலந்த மொழி
எம் தமிழ் மொழி
கம்பன் கண்ட காவிய மொழி
இளங்கோ கண்ட சிலம்பு மொழி
பொதிகை மலையில்
தோன்றிய பொதிகை மொழி
வள்ளுவர் கண்ட பொய்யாமொழி
எம் தமிழ் மொழி !

சே. கோகிலா.
இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியவியல்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

SCAN AnyScanner

படித்ததில் பிடித்தது

உலகம் அதிசயமாகவே இருந்தாலும்
மனம் விரும்பினால் மட்டுமே
ரசிக்க முடியும் அதில், ஒன்று
நம் தாய்மொழி
நமக்கு கிடைத்த முதல் அதிசயம்
அதை நாம் விரும்பி
ரசிக்க முடியும் காற்றுக்கு சலிப்பதே இல்லை
ஒரே புத்தகத்தை ஓர் ஆயிரம் முறை புரட்டுகிறது
அதேபோல்தான் நம் தாய்மொழியும்
எத்தனை முறை படித்தாலும்
சலிப்பதே இல்லை!

M. தனுசியா
I. B. Sc C.S(AI)
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

பழத்தில் பிழித்தது

மின்சாரம் துண்டிக்கப்பட்டதற்காகத்
தண்டிக்கப்படுகிறது மெழுகுவர்த்தி.
பசிக்காத கடவுளுக்கு நூறு ரூபாயும்,
பசியில் இருக்கும் மனிதனுக்கு
ஒரு ரூபாயும் போடும் மூடநம்பிக்கை
கலந்தது முட்டாள் உலகம்
சிரித்துக் கொண்டே கடந்து விடு
உன் கஷ்டங்களை மட்டுமல்ல
உன்னைக் கலங்க வைத்தவர்களையும் ....

சி. கல்பனா
பி. லிட் தமிழ்- இரண்டாமாண்டு
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

படித்ததில் பிடித்தது

தமிழ் வாழ்த்து

உயிரெல்லாம் நீதானம்மா – என் உறவெல்லாம்
நீயேயம்மா!
நீ அகம் இருப்பாயம்மா– தமிழே
தாயகம் காப்போமம்மா
பொதிகை மலைஉந்தன் வீடல்லவோ – குடி
போவதெல்லாம் கவிஞர் ஏடல்லவோ தேன் தமிழ்
நாட்டிற்குக் கண்ணல்லவோ – எழில் திகழும் நீ
நல்ல பெண்ணல்லவோ!
காவிரியும் வைகையும் உன் சொந்தமா –
நல் பூவிரி சோலை எல்லாம் உன் பந்தமா
என்னன்பு எந்நாளும் உன்மீதம்மா – நீ
இருக்கும் இடத்திலோர் இணை ஏதம்மா?
மூன்று தமிழோடு உனக்கெல்லையா ? – புகழ்
முழுவதும் போவதற்கு உலகெல்லையா ?
துயர்வந்தால் படைசூழ ஆளில்லையா? – பகை
தொடர்ந்தால் முடிப்பதற்கு வேலி ல்லையா ?

ர. ஆசாரபி
முதலாம் ஆண்டு தமிழ் இலக்கியவியல்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
தென்னாட்சி

உலக தாய்மொழி

முன்னுரை:

மொழி என்பது மனிதனின் அடையாளம் மனிதனின் உணர்வுகள் சிந்தனைகள் பண்பாடு, மரபு வரலாறு ஆகிய அனைத்தையும் இணைக்கும் சக்தி மொழியே! அந்த மொழிகளில் மனிதன் முதலில் கற்றுக் கொள்வது தாய்மொழி தாய் தன் குழந்தைக்கு முதலில் பேச்சைக் கற்றுக் கொடுப்பது மொழி. அதனால் தாய்மொழி மனிதவாழ்வின் அடித்தளம் எனலாம். உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன.அவை ஒவ்வொன்றும் தனித்துவம் கொண்ட பண்பாட்டுச்செல்வங்களாக விளங்குகின்றன. தாய்மொழி பற்றி பின்வரும் பகுதிகளில் விரிவாகக் காணலாம்.

தாய்மொழியின் வரையறை

ஒரு மனிதன் பிறந்து வளரும் போது தன் குடும்பம் மற்றும் சமூகத்தின் மூலம் இயல்பாகக் கற்றுக் கொள்ளும் மொழியே தாய்மொழியாகும். இது பள்ளியில் கற்றுக் கொள்ளும் மொழியை விட இதயத்துடன் நெருக்கமாக இணைந்த மொழி தாய்மொழி வழியாகவே மனிதன் உலகைப் புரிந்து கொள்கிறான்.

உலகத் தாய்மொழிகளின் எண்ணிக்கை

உலகம் முழுவதும் சுமார் 7000க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. .அவற்றில் சில கோடிக்கணக்கான மக்களால் பேசப்படுகின்றன. சில மொழிகள் ஆயிரக்கணக்கான மக்களால் மட்டுமே பேசப்படுகின்றன. ஆங்கிலம், சீனம், ஹிந்தி, ஸ்பானிஷ், அரபி போன்ற மொழிகள் அதிகம் பேசுவோர் கொண்ட மொழிகளாக உள்ளன.அதே நேரத்தில் பல மொழிகள் அழிவின் விளிம்பில் உள்ளன.

தாய் மொழியும் பண்பாடும்

ஒரு சமூகத்தின் பண்பாடு அதன் தாய் மொழியில்தான் முழுமையாக வெளிப்படுகிறது. பழமொழிகள், பாடல்கள் நாட்டுப்புறக்கதைகள், மரபுச் சொற்கள் ஆகியவை தாய் மொழியின் மூலம் தலைமுறைகளுக்குப் பரிமாறப்படுகின்றன. தாய்மொழி அழிந்தால் அந்த சமூகத்தில் பண்பாடும் மங்கி விடும்.

SCAN AnyScanner

தாய்மொழியும் கல்வியும்:

கல்வி தாய் மொழியில் வழங்கப்படும் போது மாணவர்கள் எளிதாக புரிந்து கொள்ள முடியும் தாய்மொழி வழிக்கல்வி மூலம் குழந்தைகளின் சிந்தனைத் திறன் படைப்பாற்றல் மற்றும் தன்னம்பிக்கை வளர்கிறது. ஆரம்ப கல்வி தாய்மொழியில் அமைய வேண்டும் என உலகின் பல கல்வியாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

தாய்மொழி மற்றும் அடையாளம்:

மனிதனின் அடையாளம் அவன் பேசும் தமிழ் மொழியுடன் இணைந்துள்ளது. தாய்மொழி பேசும் போது மனிதன் தன் பெருமையும், உரிமையும் உணர்கிறான்.

உலகத் தாய்மொழி நாள்

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21ஆம் தேதி உலக தாய்மொழிநாள் கொண்டாடப்படுகிறது. யுனெஸ்கோ அமைப்பின் முயற்சியால் இந்த நாள் அறிவிக்கப்பட்டது. தாய்மொழிகளின் முக்கியத்துவத்தை உணர்த்தவும் அழிவின் விளிம்பில் உள்ள மொழிகளை காக்கவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

தாய்மொழிகள் அழியும் காரணங்கள்:

நகரமயமாக்கல் உலகமயமாக்கல் ஆட்சி மொழிகளின் ஆதிக்கம் வேலை வாய்ப்பு காரணங்கள் போன்றவை தாய்மொழிகளின் அழிவதற்கான முக்கிய காரணங்களாக உள்ளன. பெற்றோர்கள், குழந்தைகளுக்குத் தாய்மொழியை கற்றுக்கொடுக்காததும். ஒரு முக்கிய காரணமாகும்.

தாய்மொழியை பாதுகாப்பதற்கான வழிகள்:

தாய்மொழியை வீட்டில் பேசுதல் பள்ளிகளில் தாய்மொழி பாடங்களை வலுப்படுத்துதல் இலக்கியங்களை உருவாக்குதல் தொழில்நுட்பத்தில் தாய்மொழி பயன்பாட்டை அதிகரித்தல் போன்றவை மொழி பாதுகாப்பிற்கு உதவும் ஒவ்வொரு மனிதனும் தன் தாய்மொழிக்கு பொறுப்பானவராக இருக்க வேண்டும்.

SCAN AnyScanner

தமிழ் மொழி ஒரு உலகத் தமிழ்மொழி:

தமிழ் உலகின் மிகப் பழமையான தாய்மொழிகளில் ஒன்றாகும். இலக்கியவளம் இலக்கணப்பண்பாடு ஆகியவற்றால் தமிழ் தனிச்சிறப்பு பெற்றுள்ளது. உலகின் பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து தமிழ் மொழியை பாதுகாத்து வருகின்றனர் எனவே நாமும் நமது தாய் மொழியை பெருமையுடன் போற்றி தலை சிறந்த மொழியாக வளர்க்க வேண்டும்.

முடிவுரை:

தாய்மொழி என்பது மனித வாழ்வின் அடையாளம். அது இல்லாமல் மனிதன் முழுமையான அடையாளம் பெற முடியாது உலகின் ஒவ்வொரு தாய்மொழியும் பாதுகாக்கப்பட வேண்டும். தாய்மொழியை காப்பது மனித குலத்தின் பண்பாடு செல்வத்தை காப்பதற்கு சமமாகவே நம் தாய்மொழியை நேசித்து பேசி அடுத்த தலைமுறைக்கு ஒப்படைப்பதே நம் கடமை.

சு. –னா
முதலாமாண்டு கணிதவியல்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

உலக தாய்மொழி

முன்னுரை:

மொழி மனிதனின் அடையாளமாக விளங்குகிறது. ஒரு குழந்தை பிறந்தவுடன் முதலில் கற்றுக் கொள்ளும் மொழியே தாய்மொழி. தாய்மொழி மனிதனின் உணர்வுகள், சிந்தனைகள் மற்றும் பண்பாட்டை வெளிப்படுத்தும் கருவியாகும்.

"அம்மா சொன்ன முதல் சொல்
அதுவே தாய் மொழியின் உயிர்ச் சொல்...."

தாய்மொழியின் முக்கியத்துவம்:

தாய்மொழி மனிதனுக்கு தன்னம்பிக்கையும் தெளிவான சிந்தனையும் அளிக்கிறது. உணர்ச்சிகளை இயல்பாக வெளிப்படுத்த உதவுவதுடன் குடும்பமும் சமூகமும் இணைவதற்கு தாய்மொழி முக்கிய பங்கு வகிக்கிறது. பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் காக்கிறது. "பண்பாட்டின் வேர் தாய்மொழி பாரம்பரியத்தின் பெயர் தாய்மொழி"

உலக மொழிகளின் நிலை:

உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. ஒவ்வொரு மொழியும் அந்த சமூகத்தின் வரலாறு மற்றும் கலாச்சாரத்தை பிரதிபலிக்கிறது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் பல மொழிகள் அழியும் நிலையில் உள்ளன. ஒவ்வொரு மொழிக்கும் தனித்துவமான சிறப்புகள் உள்ளன.

"பிற மொழியைக் கற்பது பெருமை
தாய்மொழியைக் காப்பது கடமை"

உலக தாய்மொழி தினம்:

மொழி வேற்றுமையை பாதுகாக்கும் நோக்கில் பிப்ரவரி 21 ஆம் நாள் உலகத் தாய்மொழி தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் தாய்மொழியின் மதிப்பை உலகம் முழுவதும் உணர்த்துகிறது. மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் கொண்டாடப்படுகிறது.

"மொழி காக்கும் நாள் இன்று
மனித நேயம் மலரும் நாள் இன்று.."

SCAN AnyScanner

தொழில்நுட்ப காலத்திலும் தாய்மொழி:

இன்றைய டிஜிட்டல் உலகில் கணினி, மொபைல், இணையம் போன்றவை மிக முக்கியமானவை. ஆனால் தாய்மொழியை மறந்து பிற மொழிகளை மட்டுமே பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். தாய்மொழியில் இணையதளங்களை உருவாக்குதல், மென்பொருட்களை வடிவமைத்தல், மொழி பயன்பாட்டை அதிகரிக்க வழியாகும்.

"மாறும் உலகில் மாறாத ஒன்று
நம் தாய்மொழி - நம் அடையாளம்"

உலகம் முழுவதும் மொழி பாதுகாப்பு முயற்சிகள்:

பல நாடுகள் தாய்மொழியை காப்பதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. பள்ளிகளில் தாய்மொழியில் கல்வி, ஊடகங்களில் தாய்மொழி உள்ளடக்கம் மற்றும் தேசிய விழாக்களில் தாய்மொழி மரியாதை போன்றவை அவற்றில் அடங்கும்.

"மனம் பேசும் முதல் மொழி
அதுவே நம் தாய்மொழி..."

கல்வியில் தாய்மொழியின் பங்கு:

கல்வி தாய்மொழிகள் வழங்கப்படும் போது மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. அறிவுத்திறன் வளர்ச்சிக்கும் சிந்தனை திறன் மேம்பாட்டிற்கும் தாய்மொழி அடிப்படையாக உள்ளது. தன்னம்பிக்கையை உணர்த்துகிறது.

"தாய்மொழி கல்வி என்றால்
திறமை தானாய் மலரும்"

மொழி அறிவின் காரணங்கள்:

தாய்மொழியை புறக்கணித்தல், பிற மொழிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல் போன்றவை மொழி அழிவிற்கு காரணமாகின்றன. இதனால் பல மொழிகள் மறைந்து வருகின்றன. எனவே தாய்மொழியை பேசவும், எழுதவும், அடுத்த தலைமுறைக்கு கற்பிக்கவும் முயற்சிக்க வேண்டும்.

SCAN AnyScanner

"எழுதினால் வாழும் மொழி
பேசினால் வளரும் மொழி"

கலாச்சார வளர்ச்சிக்கும் தாய்மொழியின் பங்கு:

மொழி நாட்டின் கலாச்சாரத்தை உயிரோட்டமாக வைத்திருக்கும். மக்கள் தங்கள் தாய் மொழியில் பாடும் போது இசை, கலை மற்றும் பாரம்பரியம் பரம்பரையாக பரவும். மொழி மறைந்தால் நாட்டின் பழைய பாரம்பரியம் மறைந்துவிடும்.

"மொழி இல்லாமல் நாடு வெறுமை
தாய்மொழி வாழ்ந்தால் வாழ்வு செழிக்கும்"

முடிவுரை:

தாய்மொழி நமது வாழ்வின் அடித்தளம் ஆகும். தாய்மொழி வாழ்ந்தால் தான் மனிதநேயம் நிலைத்திருக்கும். எனவே தாய்மொழியை காக்கும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளது.

"நமது மொழி உயிராக வாழ
கதை, பாடல், கலை பரவ
பண்பாடு, வரலாறு
என்றும் நிலைத்திட
தாய்மொழி காப்போம்
பெருமை சேர்ப்போம்"

ஆஷிபா. அ
2nd BSc CS (Artificial Intelligence)
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)

தரணி போற்றும் தாய் மொழி

'தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலைவாணர்களும் இவள் என்று பிறந்தவள்'

என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய் என்ற பாரதியின் வரிகள் எத்தனை உண்மை! கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடியாம் நம் தமிழ்க் குடி நம் மக்களுக்குக் கற்பித்தது ஏராளம்; நம் அறிவிற்கு கிட்டியது தாராளம். அறம் என்னும் கருத்தினை இலக்கியங்களின் வழி நம் மனதினில் பதிய வைத்தது நம் தமிழ் மொழி. நம் நாட்டினை அமைதி தவழும் நாடாக மாற்றிய பெருமை நம் தமிழ் மொழிக்கே உண்டு. நம் நாட்டில் நம் மனிதருடைய விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் தொட்டு அரவணைத்துச் செல்லும் குணத்தன்மையும் கொண்ட மனிதம் மலர்ந்தது நம்முடைய தமிழ் மொழியால் தான். எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பார் தொல்காப்பியர். உதாரணமாய் சில சொற்கள்: கணவனின் தம்பியைக் கொழுந்தனார் என்போம். கொழுந்து அன்னார் என்பது சரி. இந்த வீட்டின் இளைய மகன் என்பதைக் குறிப்பதற்கு கொழுந்து போன்றவன் என்ற பொருளைத் தருகிற கொழுந்தனார் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

கணவனின் உடன் பிறந்தவர்களின் மனைவியை ஓர்ப்படியார் என்று சொல்கிறது நம் தமிழ் மொழி. ஓர்ப்படியார் என்பது அந்த வீட்டில் நுழைந்த மருமகள்கள் அனைவருமே ஒரே படியில் நிற்பதற்கான சமமான உரிமை பெற்றவர்கள். இவள் மூத்த மருமகள் அதனால் இவள் உயர்ந்தவள், இவள் இளைய மருமகள் அதனால் தாழ்ந்தவள் என்ற எண்ணம் இல்லாமல் ஓர் படியில் நிற்கக் கூடியவர்கள் என்பதை உணர்த்துகிறாற்போல ஓர்ப்படியார் என்னும் அருமையான பதம் நம் தமிழ் மொழியில் எடுத்தாளப்பட்டுள்ளது.

கணவனின் தங்கையை நாத்தனார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அது நாத்தனார் அல்ல. நாற்று அன்னாள் என்பதே மிகச் சரி. இவள் இந்த வீட்டின் நாற்று போன்றவள். இங்கிருந்து இந்த நாற்று பிடுங்கி வேறொரு இடத்தில் வைத்து நடப்படும்போது தான் பிறந்த இடத்தில் அல்லாது தான் பிடுங்கி நடப்பட்ட இடத்திற்கே தன்னுடைய பயனைத் தரும்: உழைப்பைத் தரும் என்பதால் நாற்று போன்றவள் என்ற பொருள் தரக்கூடிய நாற்றனார் என்ற சொல். தமையன் என்பது அண்ணனைக் குறிக்கும்.

ஐ என்றால் தலைவன்.. தனக்கும் மூத்தவன் என்ற பொருளில் தம் ஐயன் என்பதே தமையன் என்றாயிற்று. அக்காவை அக்கை என்று சொல்வது அப்பொழுது மரபாக இருந்தது. தம் அக்கை என்பது தமக்கை ஆயிற்று. இவ்வாறு வியக்கத்தக்க எத்தனையோ பொருள் உள்ள சொற்களைக் கொண்டுள்ளது தமிழ்.

தமிழை வளர்ப்போம்; காப்போம்; பரப்புவோம்!

தீ. ஐஸ்வர்ய லஷ்மி,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை.

AnyScanner

தமிழும் அறிவியலும்

சுருக்கம்

தமிழில் மரபுவழிப் பெற்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவு தொன்மையானது. அகழ்வாய்வுகள், கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், இலக்கியங்கள் ஆகியவை இதற்குச் சான்றுகளாக உள்ளன. குறிப்பாக வெடிமருந்து தொழில்நுட்பம் போன்ற துறைகளில் தமிழர் அறிவாற்றல் வெளிப்பட்டுள்ளது. ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் அறிவியல் தமிழின் எழுச்சி புதிய பரிமாணத்தை அடைந்தது. இக்கட்டுரை அறிவியல் தமிழின் தோற்றம், வளர்ச்சி, அவசியம், பரப்புமுறைகள், கணினித் தமிழ் வளர்ச்சி மற்றும் எதிர்கால நோக்கங்கள் ஆகியவற்றை ஆராய்கிறது. முக்கியச் சொற்கள்: அறிவியல் தமிழ், தொழில்நுட்பம், மின் தமிழ், மொழித் தொழில்நுட்பம், இயந்திர மொழிபெயர்ப்பு.

முன்னுரை

தமிழ் மொழி இலக்கிய செழுமையுடன் மட்டுமல்லாது அறிவியல் சிந்தனையுடனும் வளர்ந்த மொழியாகும். அகழ்வாய்வுகள், ஓலைச்சுவடிகள், வரலாற்று ஆவணங்கள் ஆகியவற்றின் மூலம் தமிழர் அறிவியல் அறிவு நிரூபிக்கப்படுகிறது. அறிவியல் கருத்துக்களைத் தமிழில் வெளிப்படுத்தும் முயற்சி காலப்போக்கில் வளர்ச்சி பெற்றுள்ளது.

அறிவியல் தமிழ் – தோற்றமும் வளர்ச்சியும்

16–18ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற்புரட்சி உலக மொழிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியாவில் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் அறிவியல் நூல்கள், இதழ்கள் வெளியிடப்பட்டன.

1831இல் "தமிழ் மேகசின்" அறிவியல் செய்திகளை வெளியிட்டது. இரேனியுஸ் பாதிரியார் வெளியிட்ட "பூமி சாஸ்திரம்" போன்ற நூல்கள் அறிவியல் தமிழின் ஆரம்ப முயற்சிகளாகும். இராஜாஜி, கா. அப்பாத்துரையார், அ.கி. பரந்தாமனார் போன்றோர் அறிவியல் நூலாக்கத்தில் ஈடுபட்டனர்.

அறிவியல் தமிழ் – வரையறை

"அறிவியல் தமிழ்" என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பயன்படும் கருத்துக்களைத் தமிழில் வெளிப்படுத்தும் நடைமுறையாகும். வேளாண்மை, மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் அறிவியல் தமிழின் பயன்பாடு காணப்படுகிறது. அறிவியல் என்பது தொழில்நுட்பத்தையும் உள்ளடக்கிய பரந்த அறிவுத் துறையாக கருதப்படுகிறது.

அறிவியல் தமிழின் இன்றியமையாமை:

மொழி மக்களை இணைக்கும் கருவி. அறிவியல் வளர்ச்சி உலக மக்களின் பொது உடைமையாகும். ஒரு நாட்டில் கண்டுபிடிக்கப்படும் அறிவியல் உண்மைகள் உலக மக்களையும் சென்றடைய வேண்டுமென அறிவியல் கண்டுபிடிப்புகள் தாய்மொழி தமிழில் வழங்கப்படுகிறது. அதனால்தான் இன்று பாமர மக்களின் வாயிலுக்கு சென்றடைகிறது

தமிழில் அறிவியல் நூல்கள்:

19ஆம் நூற்றாண்டில் அறிவியல் பாடநூல்கள், இதழ்கள் வெளிவந்தன. நோய்கள் மற்றும் தடுப்பு முறைகள் பற்றிய நூல்கள் தமிழில் வெளியிடப்பட்டன. இதன் மூலம் அறிவியல் தமிழில் சொல்ல முடியும் என்ற நம்பிக்கை உருவானது.

இணையத் தமிழ் வளர்ச்சி:

கல்வெட்டு, ஓலைச்சுவடி, அச்சு, கணினி என தமிழ் மொழித் தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ் எழுத்துருக்கள், விசைப்பலகைகள் உருவாக்கப்பட்டன. வோர்ட், பேஜ்மேக்கர் போன்ற மென்பொருட்களில் தமிழைப் பயன்படுத்தும் வசதி உருவானது. தமிழ் விக்கிபீடியா, வலைப்பூக்கள், இணைய தளங்கள் பெருகின.

தமிழ் மொழித் தொழில்நுட்ப வளர்ச்சி:

எழுத்துப் பிழை திருத்தி, பேச்சை எழுத்தாக்கும் மென்பொருட்கள் போன்றவை மொழித் தொழில்நுட்ப வளர்ச்சியின் எடுத்துக்காட்டுகள். தமிழ் இலக்கணம், அகராதி ஆகியவை கணினி புரியும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். இயந்திர மொழிபெயர்ப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி அறிவியல் தமிழின் அடுத்த கட்டமாகும்.

SCAN AnyScanner

மின்னுலகில் தமிழின் அடுத்த கட்ட வளர்ச்சி:

தமிழில் உள்ளீடு வசதிகள் பெருமளவில் வளர்ச்சி பெற்றுள்ளன. அடுத்த கட்டமாக செயற்பாட்டு மொழித் தொழில்நுட்பத்தை உருவாக்குதல் முக்கியம். தமிழின் மூலமாக அறிவியல் வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும்.

முடிவுரை:

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலகப்பார்வையைத் தாங்கிய தமிழ்மொழி, அறிவியலையும் உலகளவில் பகிரும் வல்லமை பெற்றது. அறிவியல் தமிழின் வளர்ச்சி என்பது மொழி வளர்ச்சி மட்டுமன்று; அது தமிழர் பண்பாட்டின் தொடர்ச்சியும், எதிர்கால தலைமுறைக்கான அறிவுச் சுதந்திரத்தின் அடித்தளமுமாகும்.

துணைநூற் பட்டியல்:

★ நா. சுப்பு ரெட்டியார் – தமிழில் அறிவியல் அன்றும், இன்றும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

★ ச. ஈஸ்வரன் – அறிவியல் தமிழ், சென்னை.

★ இராதா செல்லப்பன் – கலைச்சொல்லாக்கம்.

பி. திவ்யா வேதநாயகம்

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த்துறை

பாரதியார் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(தன்னாட்சி).


மாணவிகளின் கைவண்ணம்








ப.ராஜகுமாரி
I:BA History



Arthi Sakthivel
II - BBA.
தமிழ்த் தாய்















தலைப்பு : "உலக தாய்மொழி"


INDIA
B. Nandhini (II-BCA)
பா. நந்தினி



தமிழ் தாய்
மு. தேவிலட்சுமி
முன்றாமாண்டு தமிழிலக்கியம்


தமிழ்
வாழ்க
நா. சுவிதா
முதலாம் ஆண்டு
விலங்கியல்


தா. தீபா
முதலாம் ஆண்டு
விலங்கியல்









பி. சுபாஷினி
முதுகலை முதலாமாண்டு

உலக தாய் மொழி



தாலாட்டாய் ஒலித்த மொழி,
என் தாய் சொன்ன முதல் சொல்,
என் நெஞ்சில் பதிந்த மொழி
அழகிய தமிழ் மொழி.
வாழ்க என் தாய் மொழி!!!

சு. கார்த்திகா
முதலாம் ஆண்டு கணிதம்



S. Mirbha Begam
II - BBA



ந. அர்ச்சனா
II - B.Com CA

2025 துறை நிகழ்வுகள்

வள்ளலார் கருத்தரங்கம்



பாரதியார் அறிவியல் கண்காட்சியில்.....







தலைவர்கள் படத்தை துறைக்கு வழங்கிய போது...





பொங்கல் நிகழ்வில்.....





Bos பாடத்திட்ட வடிவமைப்பு நிகழ்வின் போது








Navakurichi, Tamil Nadu, India
Hppp+hc5, Navakurichi, Tamil Nadu 636112, India
Lat 11.586322° Long 78.73554°
Monday, 22/12/2025 01:15 PM GMT +05:30
Google

துறைத் தலைவருக்கு பாரதியார் விருது வழங்கப்பட்ட தருணம்....





ஆண்டு விழாவில் நடனம் ஆடிய மாணவிகள் .....



காமராஜர் பிறந்த தினம் அன்று.....



AnyScanner

தமிழ் இலக்கியப் பேரவை அன்று.....



பரவச உலகம் சுற்றுலா சென்ற போது...



சிதம்பரம் நடராஜர் கோவில்.....





பிச்சாவரம் சுற்றுலாப்பயணம் மாணவிகளுடன்.....



தமிழாய்வுத்துறை மாணவி தங்கப்பதக்கம் பெற்ற போது.....





ராமானுஜர் மணிமண்டபம் சென்ற போது.....






முத்துமலை முருகன் கோவில் சென்ற போது.....






ஆண்டு விழா நிகழ்வில்.....





கோவை ஈஷா யோகா .....



கோவை அறிவியல் மண்டல கண்காட்சி பார்வையிட்ட தருணம்











மருதமலை முருகன் கோவில் பயணம்.....



தமிழாய்வுத்துறை மாணவிகளின் திறமைக்கான விருதுகள்....





புழுதி இணைய இதழுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்ட தருணம்...















மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கிய தருணம்....





வள்ளலார் 202ஆவது வருவிக்க உற்ற தினம் ராஜ்பவனில்....



குடியரசு தின விழா நிகழ்வின் போது ....







கெமர் தமிழ்ச்சங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம்





செங்காந்தள் மலர் -1 வெளியீட்டு விழாவின் போது.....





தமிழாய்வுத்துறை மாணவிகள் முதல்வருக்கு விருது வழங்கிய தருணம்....



ஓணம் கொண்டாட்டத்தின் போது,.....



சேலம் சட்டக்கல்லூரியில் நடுவராகப் பங்கேற்ற போது....



சேலம் அரசுக்கல்லூரியில் நடுவராகப் பங்கேற்ற போது....



வள்ளலார் மாநாடு சென்ற தருணம்....



தமிழாய்வுத்துறை வழங்கும்

செங்காந்தள்

மாணவியர் இதழ்- 2

இதழ் வெளியீட்டாளர்:

முதல்வர் முனைவர் தே. ராஜகுமாரி,
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
(மற்றும்)
சிறப்பு விருந்தினர் பாடலாசிரியர் திரு. நிரஞ்சன் பாரதி.

இதழ் ஆசிரியர்:

முனைவர் சு. இந்திரா,
தமிழாய்வுத் துறைத் தலைவர்,
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி).

இதழ் துணை ஆசிரியர்கள்:

மா. ஷர்மிளா
தமிழாய்வுத் துறை உதவிப் பேராசிரியர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி).

ரா. ஐஸ்வர்யா
தமிழாய்வுத் துறை உதவிப் பேராசிரியர்,
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி).

பி. திவ்யா
தமிழாய்வுத் துறை உதவிப் பேராசிரியர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி).

SCAN AnyScanner

இதழ் ஆலோசனைக் குழு ஆசிரியர்கள்:

- வி. ரேகா, M.A., M.Phil., B.Ed.,
- முனைவர் பி. பீ. ரஹ்மத் பீபி M.A., P.h.D., T.P.T., P.P.T.,
- க. புஷ்பா, M.A., B.Ed., M.Phil.,
- அ.ரஞ்சிதா M.A., M.Phil., NET.,
- முனைவர் ந. ரேவதி M.A., B.Ed., M.Phil., Ph.D.,
- க. சுமதி, M A., M.Phil., NET.,
- முனைவர் செ. ஸ்ரீ அழகு லெட்சுமி M.A., M.Phil., B.Ed., Ph.D.,
- முனைவர் தி. மணிமேகலை M.A., M.Phil., B.Ed., P.h.D.,
- நா. உமாராணி, M.A., M.Phil.,
- கோ. ஜானகி M.A., B.Ed., M.Phil.,
- மு. கலைச்செல்வி, M.A.,
- தீ. ஐஸ்வர்ய லஷ்மி, M.A., M.Ed., M.Phil., M.A.,
- ம. மணிப்ரியா, M.A., B.Ed.,
- முனைவர் ரா. சித்ரா M.A., M.Phil., B.Ed., P.h.D.,

- - -

SCAN AnyScanner

ஸ்ரீ சக்தி அறக்கட்டளையின்



பாரதியார்

மகளிர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

தேவியாக்குறிச்சி.



இங்ஙனம்...

தமிழாய்வுத்துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள்.

SCAN AnyScanner